செ.வெ.எண்: 71 நாள்: 26.01.2020

**குடியரசுதின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தேசியக்கொடியினை பறக்கவிட்டு மரியாதை செலுத்தினார்களா.**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற குடியரசுதின விழாவில் 97 பயனாளிகளுக்கு ரூ.42.49 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.**

---------------------------------------------------------------------------------------------------

புதுக்கோட்டை சேமப்படை மைதானத்தில் இன்று (26.01.2020) 71வது குடியரசு தின விழாவை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தேசியக்கொடியை பறக்கவிட்டு மரியாதை செலுத்தி, காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்கள். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பி.அருண்சக்திகுமார், இ.கா.ப, அவர்கள் உடனிருந்தார்.

இதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சுதந்திர போராட்ட தியாகிகள் மற்றும் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு கதராடை அணிவித்து சிறப்பித்தார். சமாதானத்தை குறிக்கும் வகையில் வெண்புறாக்கள் பறக்க விடப்பட்டது. காவல்துறையில் சிறப்பாக பணிபுரிந்த 42 காவலர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

மேலும் இவ்விழாவில் வருவாய்த்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, செய்தி மக்கள் தொடர்புத்துறை, புவியியல் மற்றும் சுரங்கத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, கருவூலத்துறை, சுகாதாரத்துறை, தொழிலாளர் நலத்துறை, வேளாண்மைத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, நில அளவை பதிவேடுகள் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டத்துறை, பள்ளிக் கல்வித்துறை உள்பட பல்வேறு துறைகளைச் சேர்ந்த 487 அலுவலர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் வருவாய்த்துறை, முன்னாள் படைவீரர் நலத்துறை, வேளாண்மைத்துறை, வேளாண்மை பொறியியல்துறை, தோட்டக்கலைத்துறை, தாட்கோ, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை என பல்வேறு துறைகளின் சார்பில் 97 பயனாளிகளுக்கு ரூ.42,49,630 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து புதுக்கோட்டை இராணியார் அரசு மேல்நிலைப்பள்ளி, மௌண்ட்சியான் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, அறந்தாங்கி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, ஆலவயல் அரசு மேல்நிலைப்பள்ளி, குடுமியான்மலை அரசு உயர்நிலைப்பள்ளி, வெண்ணாவல்குடி அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய 6 பள்ளிகளைச் சார்ந்த 834 மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற கண்கவர் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி.ஜெயலெட்சுமி தமிழ்செல்வன், மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர் திருமதி.உமாமகேஸ்வரி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.காளிதாசன், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் அழ.மீனாட்சிசுந்தரம், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் தண்டாயுதபாணி, நகராட்சி ஆணையர் ஜீவாசுப்பிரமணியன் மற்றும் அனைத்துத் துறை அரசு அலுவலர்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**